அம்பத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

O.S.No. 159/2017 RCOP: /

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திரு.R. இளங்கோ என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/ பிரதிவாதி தரப்பின் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் ஆண்டின் 10வது சட்டத்தில் வகை முறைகளுக்கு உட்பட்டு 2024ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 20-ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

வா.சா.1 20.09.2024

பெயர் உதயகுமார் தந்தை/ கணவர் பெயர்

தொழில் வயது

இனம் சமயம்

கிராமம் வட்டம்

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>:-

10. வா.சா.ஆ 3 கடிதத்தை நான் வங்கிக்கு அனுப்பினேன். அதன் அடிப்படையில் நிறுவனத்தின் அணைத்து வங்கிபரிவர்தனைகளும் நிருத்திவைக்கப்பட்டது. நாங்கள் ஹச்சிடிஎப்சி, இந்தியன் வங்கியில் கணக்கு வைத்துள்ளோம். நான் மேற்படி கடிதம் கொடுக்கும்போது சுமார் 12லட்சம் ரூபாய் வங்கி கணக்கில் இருந்தது. நிறுவனத்தின் அலுவலகம் எனது வீட்டிற்கு பின்பு தனியான செட்டில் இருந்தது. மேற்படி அலுவலகத்திற்கு வாடகையாக ரூபாய் 4000 மும் முன்பணம் 40,000 மும் வாங்கி இருந்தேன்.

11. மேற்படி அலுவலகத்தின் சாவி மூன்று பேரிடமும் இருக்கும். பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்உரையில் படித்துள்ளேனா என்றால்

ஞாபகம் இல்லை. எதிர்உரையில் பிரதிவாதிகள் பத்தி 19 ல் சாவி என்னிடம் தான் இருக்கிறது குறிப்பிட்டு சொல்லிஇருக்கிறார்கள் அதை மறுத்து பதில் உரை அல்லது ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் ஆடிட்டர் மூலமாக சமரசம் பேசியதாக தெரிவித்துள்ளேன் அதன்அடிப்படையில் ஆடிட்டர் யாரையாவது அலுவலகத்தில் உள்ள பொருட்களை பட்டியலிட அனுப்பினாரா என்றால் இல்லை. 27.01.2016 அன்று ஆடிட்டர் அனுப்பிய ஆட்களுடன் பிரதிவாதிகள் வந்து அலுவலகத்தில் உள்ள பொருட்களை பட்டியல் எடுத்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. அந்த பட்டியலில் பசிர் என்பர் என்சார்பாக சட்சி கையொப்பம் இட்டுள்ளார என்றால் சரியல்ல.

12. மேற்படி பட்டியல் மற்றும் அதன் மதிப்பீடை எதிர்உடையுடன் பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 ஒப்பந்தத்தில் குட்வில் பற்றிய எந்த குறிப்பும் இல்லை. மேற்படி ஆவணத்தில் அந்த பங்குதாரர் ஒப்பந்தம் முற்று பெரும் பட்சத்தில் வேறுபுது நிறுவனம் தொடங்க கூடாது என்று எந்த சரத்தும் கிடையாது.

13. எங்களது நிறுவனவாடிக்கையாளர்கள் காசோலையாக பணத்தை செலுத்தும் பட்சத்தில் அதனுடன் ஒரு இணைப்பு கடிதம் அனுப்புவார்கள் என்று சொன்னால் சிலர் அனுப்புவார்கள். மேற்படி கிடைக்கப்பெற்ற கடிதங்களை இவ்வழக்கில் ஆவணமாக நான் குறியீடு செய்யவில்லை. மேற்படி கடிதங்கள் அணைத்தும் எனது அலுவலகத்தில் தான் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. நிறுவனம் நடத்திவந்த அலுவலகத்தை நான் தற்போது உபயோகிக்கிறேனா என்றால் அதனை இடித்துவிட்டோம். நிறுவனத்தை வேருஇடத்திற்கு மாற்றுவதற்கு நான் முன்பணம் எதுவும் நிறுவனகணக்கில் இருந்து கொடுக்கவில்லை.

14. நான் வீடுகட்டுவதற்காக 15 லட்சம் ரூபாயை நிறுவனம் மூலம் கடன்வாங்கி தர கேட்டேன் அதில்தான் எங்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அலுவலகத்தை நிருவாக இயக்குநர் என்ற முறையில் நான் தான் பராமரித்து வந்தேன் என்று சொன்னால் சரியல்ல. சாவி என்னிடம் இருந்ததால் தான் பதில்உரைக்கு எந்த மறுப்பும் தெரவிக்காமல் நான் பொய்சாட்சி அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் வழக்கில் கோரிய எந்த பரிகாரமும் எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது, மறு விசாரணை இல்லை.